**எம்பிலிபிட்டிய நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எம்பிலிபிட்டிய நகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்குகள் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு வழுவின் காரணமாக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட மோட்டார் வாகனத்தின் மூலதனப் பெறுமதியான ரூபா 6,919,643 தொகைக்குரிய சொத்துக் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு, மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் பதிவதற்குப் பதிலாக அதன் நிச்சயமற்ற வட்டியையும் உள்ளடக்கிய கடன் பெறுமதியான ரூபா 7,750,000 அக்கணக்குகளில் பிரதி செய்யப்பட்டிருந்தது. மேலும் இதற்குரிய நிச்சயமற்ற வட்டிக்காக பேரேட்டுக் கணக்கும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருமானம் மற்றும் செலவினங்களுக்குரிய சகல கணக்குகளும் பேரேட்டில் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 288,333 தொகையான கடன்கொடுத்தோருக்காக ஆண்டின் இறுதி நிதிக்கூற்றுக்களின் மூலம் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் மழை நீர் வடிகாண் முறைமையினை நிர்மாணிப்பதற்கு பெறப்பட்ட கடன் பணத்திற்காக மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய ரூபா 1,047,441 தொகையான கடன் தவணைப் பணம் தொடர்பாக எவ்வித சிராக்கங்களும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 25,060,658 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,915,796 ஆக இருந்தமையால் வேறுபாடு ரூபா 3,080,698 ஆகும். அந்த வேறுபாட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து பேரேட்டுக் கணக்குகளில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | நகரசபை கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) | |
| | 127(உ) ஆம் பிரிவு | தமது அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆபத்துக்களை ஏற்படுத்தும் மரங்களை அகற்றும் அதிகாரம் நகர சபைக்கு இருந்த போதிலும் இந்த செயற்பாட்டிற்காக தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படாமையினால் அதற்குரிய பொது மக்களினால் அனுப்பப்பட்ட பல்வேறு கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு நகர சபை தவறியிருந்தது. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை - 1992 | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2) | பல வருடகாலம் முதல் செலுத்தப்பட்ட முற்பணமான ரூபா 1,151,914 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 1999 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 4,450,990 தொகையான வைப்புக்கள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பந்தி | நகர சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் பெண் உத்தியோகத்தரினால் கணக்காய்வுத் திகதியான 2014 மே 22 ஆந் திகதி வரை 02 வருடங்களும் 08 மாதத்திற்கும் உரிய பயன்படுத்தப்பட்ட மின்சாரம் மற்றும் நீருக்காக எவ்வித பணமும் நகர சபைக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,744,440 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,165,585 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

செலவினம் அதிகரிக்கும் வேகத்தை விட அதிகரித்த வேகத்தில் வருமானம் அதிகரித்தமையின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மிகை 206 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 14,732 | 5,220 | 23,465 |
| வாடகை | 950 | 1,240 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 350 | 402 | - |
| ஏனைய வருமானம் | 14,900 | 19,535 | 2,792 |

#### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானத்தை ஒப்பீடு செய்த போது ஆதனவரி, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணங்களினதும் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 39 சதவீதம், 105 சதவீதம் மற்றும் 59 சதவீதம் ஆன குறைவைக் காண்பித்தது.

#### 2.3.3 ஆதன வரி

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 23,465,000 தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் பல வருடகாலம் முதல் அறவீடுகள் கைவிடப்பட்ட ஆதனவரி உயர் சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் அந்த ஆதனவரியை அறவிடும் வகையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தரின் உதவி பெறப்பட்டிருந்த போதிலும் நடப்பாண்டிற்குரிய ஆதனவரி அறவிடல் திருப்திகரமான நிலையில் காணப்படாமையினால் மீளாய்வாண்டின் ஆதனவரித் தொகையில் 39 சதவீத நிலுவை அவதானிக்கப்பட்டது.

**2.3.4 வாடகை**

-------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபைக்குச் சொந்தமான பள்ளேகம பொதுச் சந்தையில் 60 கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கோ அல்லது வாடகைக்கு வழங்கு தொடர்பாக வாடகை உடன்படிக்கை அல்லது வேறு எழுத்துமூல இணக்கப்பாடொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. நகர மத்தியில் அமைந்துள்ள அதிகளவான பெறுமதியைக் கொண்ட இந்தக் கடைகளின் மூலம் வாடகையாக சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் பல வருடகாலம் முதல் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) பள்ளேகம பஸ் நிலையத்தின் வளவில் அமைந்துள்ள 30 தற்காலிகக் கடைகளுக்குரிய ரூபா 839,316 நிலுவைப் பணம் கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கடைகள் முறையான உடன்படிக்கையின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கல் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக கடைகளின் வாடகை செலுத்துவதைத் தவிர்த்திருந்த கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கும் போது நகர சபைக்கு பாதகமான நிலைமையொன்று எழக்கூடிய ஆபத்தும் காணப்பட்டது.

**2.3.5 ஏனைய வருமானம்**

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படுகின்ற பிரகாரம் உள்ளூராட்சி அதிகாரச்சட்டம் (ஏற்றுக்கொள்ளப்பட உப விதிகள்) எம்பிலிப்பிட்டிய நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமுல்படுத்துவதற்கு 2010 ஆகஸ்ட் 25 ஆந் திகதி நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதன் கீழ் நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்படுகின்ற விளம்பர அறிவித்தல்கள் மற்றும் பதாதைகளுக்காக சபையினால் கட்டணம் அறவிட வேண்டிய போதிலும் 2014 மே 27 ஆந் திகதி நகர சபையின் வருமான உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது நகர சபைக்கு கட்டணம் செலுத்தாது காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பதாதைகள் பல எண்ணிக்கையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அது தொடர்பாக சபையினால் இழக்கப்பட்ட வருமானம் அண்ணளவாக ரூபா 222,275 ஆக இருந்தது.

(ஆ) நகரசபை அதிகாரப் பிரதேசத்தில் கணிசமான அளவில் முச்சக்கர வண்டித் தரிப்பிடங்கள் காணப்பட்ட போதிலும் அதற்காக வசதிகளை வழங்கியதன் பின்னர் உப விதிகளை விதித்து மாதாந்த அல்லது வருடாந்த வருமானமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைத் திட்டமொன்று சபையிடம் காணப்படவில்லை.

**2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எம்பிலிபிட்டிய மாவட்ட நிதிமன்றத்தினாலும் நீதவான் நீதிமன்றத்தினாலும் 2013 ஏப்ரல் முதல் கிடைக்க வேண்டிய ரூபா 1,433,597 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் கணக்காய்வுத் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) 2012 நவம்பர் முதல் 2013 மார்ச் வரையான காலத்திற்குரியதாகக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 92,800 தொகை கணக்காய்வுத் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டதுடன் 2013 மார்ச் 31 ஆந் திகதியின் பின்னர் கிடைக்க

வேண்டிய முத்திரைக் கட்டண அளவினை இனங்காண்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.7 தொலைபேசிக் கோபுரங்களுக்காக இலங்கைக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் V ஆவது பட்டோலையின் படி விதிக்கப்பட்ட கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் நகர சபையினால் எவ்வித கட்டண அறவிடல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 165(இ)(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஏதாவது காணியொன்றை ஏலத்தில் விற்பனை செய்யும் போது அந்த விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணத்தில் 1 சதவீதத்திற்குச் சமமான வரியொன்று உரிய ஏலதாரரினால் சபைக்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள காணி ஏலவிற்பனைகளில் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வருமானத்தில் 1 சதவீதத்திற்குப் பதிலாக விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டு விற்பனை விலையில் 1 சதவீத வரியாக சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறிப்பிட்ட வரித் தொகையை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமிய வீதிகளை இனங்கண்டு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கையேற்கப்பட்டிருக்கவில்லை. வீதிப் பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2013 யூன் 14 ஆந் திகதி முதல் 18 ஆந் திகதி வரை தாய்லாந்தில் நடைபெற்ற செயலமர்விற்கு பங்குபற்றுவதற்காக ஒருவருக்கு ரூபா 35,000 வீதம் ரூபா 210,000 தொகை முற்பணமாக மீளாய்வாண்டின் போது தனியார் நிறுவனமொன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய வெளிநாட்டு சுற்றுலா செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. ரூபா 210,000 தொகையான பணத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர சபை நிதி ஏற்பாட்டின் கீழ் தெற்கு வாய்க்கால் புதிய நகர பிரதான வீதி தொடக்கம் புதிய நகர பாலம் வரை வீதியின் மதகுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 469,932 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் விவசாய அமைப்புடன் 2013 யூலை 16 ஆந் திகதி ரூபா 469,931 பெறுமதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2013 யூலை 29 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு ரூபா 90,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2014 மே 22 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கை செய்யப்பட்டு 07 மாதங்கள் கடந்திருந்த போதும் அவ்வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. வேலைக்குரியதாக நிர்மாணிக்கப்பட்ட 01 மற்றும் 02 ஆம் இலக்க மதகுகளின் ஹியூம் குழாய் நீர் வடிந்து செல்லும் மட்டத்தில் தாழ்வாக போடப்பட்டமையினால் கால்வாயின் நீர்மட்டத்திற்கு மேலாக கால்வாயில் வழிந்தோடும் நீர் மதகுகளின் ஊடாக தனியார் காணிகளுக்கு வழிந்தோடுகின்றமையும் அதன் மூலம்

வீதி நிர்மாணங்களின் இருப்பில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றமையும் பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) நகர சபை நிதி ஏற்பாட்டின் கீழ் புதிய நகர தெற்கு வாய்க்கால் தொடக்கம் புதிய நகர பாலம் வரை வீதிக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யும் கட்டம் II இற்காக ரூபா 981,418 மதிப்பீட்டின் அடிப்படையில் 2013 யூலை 29 ஆந் திகதி ரூபா 190,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. பரிசோதனைத் திகதி வரையிலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 07 மாதங்கள் அளவில் கடந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 மே 22 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் ஆரம்ப மட்டத்திலேயே காணப்பட்டது. அவ்வாறே இந்த வீதியின் 510 மீற்றர் அளவில் கிரவல் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் வீதிக்காக மண் நிரப்பி செப்பனிடவேண்டிய பகுதிக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர சபை நிதி ஏற்பாட்டின் கீழ் தர்சனகம குளத்து வீதிக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 966,894 பெறுமதியான மதிப்பீட்டின் அடிப்படையில் ஹிங்குர ஆரயாய விவசாய அமைப்புடன் உடன்படிக்கையில் 2013 சனவரி 22 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட உடன்படிக்கையின் படி இந்த வேலை திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டமைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபாரிசின் படி பட்டியலின் அடிப்படையில் நிறுத்தி வைத்தல் மற்றும் உடன்படிக்கைப் பிணைப் பணம் கழிக்கப்பட்டன் பின்னர் ரூபா 773,641 தொகை 2014 மார்ச் 10 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2014 மே 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் வீதியின் 1400 மீற்றர் தூரத்தை அபிவிருத்தி செய்வற்காக ரூபா 966,642 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் வீதியின் நீளம் 1300 மீற்றர் ஆக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் படி வீதியின் 100 மீற்றர் நீளத்திற்குரிய நிறைவேற்றப்படாத செயற்பாடுகளுக்காக ரூபா 69,046 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் வீதியின் ஆரம்ப முதல் 500 மீற்றர் எல்லை தொடக்கம் 700 மீற்றர் எல்லை வரை (குளத்தின் எல்லை) 200 மீற்றர் அளவும் 800 மீற்றர் எல்லை முதல் 1000 மீற்றர் எல்லை வரை (கோசுவ அருகில்) மேலும் 200 மீற்றர் அளவுமாக 400 மீற்றர் அளவு முறையான பிரகாரம் வடிகாண் வெட்டி போதியளவான அகலத்தில் அபிவிருத்தி செய்யப்படாமையின் காரணமாக ஈடுபடுத்தப்பட்ட கிரவல் முழுமையாக கழுவிச் செல்லப்பட்டு வீதி பழுதடைந்திருந்தது. அதன் பிரகாரம் 400 மீற்றர் பகுதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 276,183 செலுத்தப்பட்டமை தொடர்பாக கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. நிலைமை இவ்வாறு இருக்கும் போது எவ்வித பரிசோதனைகளுமின்றி மாகாண பொறியியலாளரினதும் தொழில்நுட்ப உத்தியோகத்தரினதும் சிபாரிசின் அடிப்படையில் இந்த வேலையின் நிறுத்தி வைத்தல் பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது.

**4.　கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1　பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 53 செலவின விடயங்களுக்குரிய ரூபா 20,881,448 தொகையான நிதிஏற்பாடு எவ்வித செயற்பாடுகளுக்கும் ஈடுபடுத்தப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 07 செலவின விடயங்களுக்குரிய ரூபா 541,000 தொகையான நிதிஏற்பாடு முழுவதும் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) 17 செலவின விடயங்களுக்குரிய நிதிஏற்பாட்டில் 48 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான சதவீதத்தில் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

**5.　முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்